நகல்:

தமிழ் நாடு அரசு

அனுப்புநர்
திரு செ.சு.ராமசந்திரன், பி.ஏ.,
(உறானர்ஸ்)
அரசு இணை செயலாளர்.

கடித எண் 33609/85-1
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த
(அ.வி.111) துறை, புனித ஜார்ஜ்
கோட்டை, சென்னை-9
நாள் 16.5.85.

பெறுநர்:

ஆணையர்

ஐயா, வணக்கம்

பொருள்: அரசு ஊழியரின் மாறுதலின்போது பணியேற்பு இடைக்காலத்திற்குப் பதிலாக சிறப்புத் தற்செயல் விடுப்பு எடுத்தல் - தெளிவுரை.

பார்வை: 1. அரசாணை(நிலை) எண் 929, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (அ.வி.1)துறை, நாள் 13.8.79.

2. அரசு கடித எண் 53521/80-2, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (அ.வி.1), துறை நாள் 12.8.81.

3. அரசு கடித எண் 25177/82-1 பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (அ.வி.111) துறை, நாள் 29.3.82

----

பார்வையில் 1ல் கண்ட அரசாணையில் மாறுதலின்போது, அரசுப் பணியாளர்கள் பணியேற்பு இடைக்காலத்திற்குப் பதிலாக, சிறப்புத் தற்செயல் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. பார்வை 2ல் கண்ட அரசுக் கடிதத்தில் சிறப்புத் தற்செயல் விடுப்பு வழங்கப்படும்போது ஞாயிற்றுக் கிழமைகளை சிறப்புத் தற்செயல் விடுப்புடன் சேர்த்து அனுபவித்துக்கொள்ள அனுமதி வழங்கலாம், என்றும் மற்ற அரசு விடுமுறைத் தினங்களாக இருந்தால் அவற்றைச் சிறப்புத் தற்செயல் விடுப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும், ( ) என்றும் பார்வை 3ல் கண்ட அரசுக் கடிதத்தில் தற்செயல் விடுப்பைச், சிறப்புத்தற்செயல் விடுப்புடன் சேர்த்து பத்து நாட்களுக்கு மிகையாகாமல் அனுபவித்துக் கொள்ள அனுமதி அளிக்கலாம் என்றும் அறிவுரை வழங்கப்பட்டது.

2. சிறப்புத் தற்செயல் விடுப்புடன் மற்ற அரசு விடுமுறைகளைச் சேர்த்து அனுபவிக்க இயலாது. ஆனால், தற்செயல் விடுப்புடன் மற்ற அரசு விடுமுறைகளையும் சேர்த்து அனுபவிக்க இடம் உள்ளது. முதலில் தற்செயல் விடுப்பும் பிறகு சிறப்புத் தற்செயல் விடுப்பும் எடுக்க அனுமதித்தால் ஞாயிறு தவிர மற்ற அரசு விடுமுறைகளையும் அனுமதிக்க இயலாது. அதனால் முதலில் சிறப்புத் தற்செயல் விடுப்பும் பிறகு தற்செயல் விடுப்பும் எடுக்கப்படுமானால் ஞாயிறு எட்பட மற்ற அரசு விடுமுறை தினங்களையும் அனுபவிக்க இடம் உள்ளது. இதனால் அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணை, அதாவது, சிறப்புத்தற்செயல் விடுப்புடன் மற்ற விடுமுறைகளைச் சேர்க்கக் கூடாது என்பதை செயல்படுத்த இயலாமல் போய்விடும். எனவே முதலில் சிறப்புத் தற்செயல் விடுப்பும் பிறகு தற்செயல் விடுப்பும் அதனைத் தொடர்ந்து அரசு விடுமுறை தினங்களை அனுபவிக்க அனுமதி அளிக்கலாமா என்பதற்கான தெளிவுரை வழங்குமாறு நகர ஊரமைப்பு இயக்குநர் அரசைக் கேட்டார்.

3. அரசு ஆய்வு செய்து கீழ்க்கண்ட ஆணையைப் பிறப்பிக்கிறது.

அடிப்படை விதி 106ன் கீழ் அறிவுரை 2(இ)ன்படி ஞாயிற்றுக் கிழமையைத் தவிர மற்ற விடுமுறை நாட்கள் பணியேற்பு இடைக்காலத்துடன் கணக்கிடப்படும். ~~ஞாயிற்றுக் கிழமையை பணியேற்பு இடைக்காலத்திற்குப்~~ பதிலாக பயன்படுத்தப்படும் சிறப்புத் தற்செயல் விடுப்புடன் சேர்த்து அனுபவிக்கலாம். மற்ற விடுமுறை நாட்களை அனுபவிக்க இயலாது. எனவே, முதலில் சிறப்புத் தற்செயல் விடுப்பும் பிறகு தற்செயல் விடுப்பும் அதனைத் தொடர்ந்து அரசு விடுமுறை தினங்களை அனுபவிக்க அனுமதி அளிக்க இயலாது.

தங்கள் உண்மையுள்ள,
(ஒம்)
அரசு இணைச் செயலாளருக்காக.

//உண்மை நகல்//

தமிழ் நாடு நகர் நிர்வாக பயிற்சி நிலையம்,
கோயம்புத்தூர்-43.

தொ.மு.3/85

நாள்: 5.6.85.

நகல் அனுப்பப்படுகிறது.

(ஒம்) ஞ. தண்டபாணி,
இயக்குநருக்காக.

பெறுநர்
அனைத்து அலுவலர்கள்.
அனைத்து அலுவலக ஊழியர்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

வரா/5/6/

மேலாளர்.